மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த ஊர் எங்கே இருக்கிறது என்று தெரிந்து அல்லவா கேட்க வேண்டும். சப்ளிமென்டரி அந்த ஊரைப் பற்றிதான் இருக்க வேண்டும். (குறுக்கீடு) இது முறை அல்ல. பொதுவான கேள்வியாக இருந்தால் வேறு உறுப்பினர்களை அனுமதிப்பது வழக்கம். ஆனால் கேள்வி அந்தத் தொகுதியைச் சார்ந்தது, ஒரு குறிப்பிட்ட ஊரைச் சார்ந்த பிரச்சினை. மற்ற உறுப்பினர்களுக்கு அதில் என்ன தெரியும் ?

வினா எண் *169*, திரு. க. அர்ச்சுனன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

169—

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மூலம் கடன் வழங்குதல்

***15464**—திரு. க. அர்ச்சுனன் :*

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழக மாவட்டக் கிளைகளில் ரூபாய் இரண்டு லட்சத்திற்குக் கீழ் கடன் கொடுப்பது நிறுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு.துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) தற்சமயம் இவ்வகைக் கடன்கள் தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கியின் வரம்பில் அரசால் கொண்டு வரப்பட்டுள்ளதால், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் பங்கு குறைந்துள்ளது.

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இரண்டு இலட்சம் ரூபாய்க்குக் கீழே சிறிய தொழிலை செய்பவர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். தொழில் துவங்குபவர்களை ஊக்குவிக்கின்ற வகையிலே ஏற்கெனவே 50 ஆயிரம் ரூபாய்க்குக் கீழே இருப்பவர்களுக்கு மட்டும் இந்தத் தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலமாக கடன் வழங்காமல் இருந்தது. இப்போது அந்த 50 ஆயிரம் என்பது 2 இலட்சமாக ஆக்கப்பட்டிருக்கிறது. அதனால் பலபேர்,

சாதாரண நபர்கள் இந்தக் கடனைப் பெற்று தொழில் துவங்குவதற்கான வாய்ப்பை இழந்திருக்கிறார்கள். ஏற்கெனவே இருந்ததைப்போல, 50 ஆயிரம் ரூபாய்க்கு மேற்பட்ட தொகையை வழங்கக்கூடிய வகையிலே முடிவு எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தினுடைய வரம்பு 90 இலட்சத்திலிருந்து இப்போது 150 இலட்சமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதோடு சிப்காட்டோடு அவர்கள் டை ஓவர் என்கிறபோது 250 இலட்சம் வரை கடன் கொடுக்கிறார்கள். ஆகவே, 5 இலட்சத்திற்குக் கீழே இருக்கின்றவைகளையெல்லாம் அவர்கள் கவனிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டதால்தான் டைகோ வங்கி மூலம் கொடுக்கலாம் என்று முடிவு எடுத்து இப்போது அந்த வங்கியின் மூலம் 5 இலட்சத்திற்குக் கீழே கடன்கள் எவ்வளவு பேர் கேட்டாலும், அவ்வளவு பேருக்கும் அந்த வங்கி கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறது. அதற்குத் தேவையான நிதியாதாரமும் அந்த வங்கிக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதோடு தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகமும் முழுமையாக கடனை நிறுத்தி விடவில்லை. அளவைத்தான் குறைத்திருக்கிறார்கள். அதன் மூலம் இப்போதும் கடன் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

முற்பகல் 10.20

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது டைகோ வங்கி எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் இயங்குகின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது 15 மாவட்டங்களில் இயங்கிக் கொண்டிருக்கிறது. மற்ற மாவட்டங்களிலும் விரைவாகத் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. எஸ். துரைமுருகன்.

திரு. கே. எஸ். துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் சார்பில் கடன் வழங்குகிறபோது அவ்வாறு வழங்கப்படுகிற கடன் தொகைக்கு அடமானமாக 'கொலேட்டிரல் செக்யூரிட்டி'யாக அசையாச் சொத்துக்களைக் காட்டுகிறபோது அந்தச் சொத்தினுடைய கைட்லைன் வேல்யூ-வை மதிப்பீடாக எடுத்துக் கொள்கிறார்கள். ஆனால் அந்தச் சொத்தினுடைய மார்க்கெட் வேல்யூ அதைவிட பல மடங்கு அதிகமாக இருக்கிறது. முன்பு

மதிப்பீடாக அதைத்தான் எடுத்துக் கொண்டிருந்தார்கள். தற்சமயம் கைட்லைன் வேல்யூ-வை மதிப்பீடாக எடுப்பதால் கடன் வாங்கி தொழில் துவங்குவோர் சிரமப்படுகிறார்கள். ஆகவே தமிழகத்தில் விரைவாக தொழில் முன்னேற்றம் ஏற்படுகிற இந்தச் சூழ்நிலையில் இதனை மறுபரிசீலனை செய்து அந்த விதிமுறைகளை மாற்றியமைத்து சொத்தினுடைய கைட்லைன் வேல்யூ-க்கு பதிலாக மார்க்கெட் வேல்யூ-வை எடுத்துக் கொண்டால் அந்தத் தொழில் முனைவோர்களுக்கெல்லாம் எளிதாக இருக்கும். தொழில் வளர்ச்சியும் விரைவாக இருக்கும். அதை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்க்கெட் வேல்யூ-ஐ எடுத்துக் கொள்ள வேண்டும் என்று ஏற்கெனவே அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஜெயக்குமார்.

திரு. எஸ். ஜெயக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் நலத்துறை கார்ப்பரேஷன் மூலமாக வழங்கப்படும் கடன்கள் எல்லாம் டைகோ மூலமாக வழங்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். அவை டைகோ மூலமாக விரைவாக வழங்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை வந்துள்ள விண்ணப்பங்கள் அத்தனைக்கும் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. இனி எவ்வளவு வந்தாலும் வழங்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 170, திரு. எச். எம். ராஜு, இருக்கையில் இல்லை. அவருக்குப் பதில் டாக்டர் எம். கருப்புசாமி கேட்கிறார்; மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

170—

நீலகிரி மாவட்டத்தில் தேயிலை நாற்றுக்கள் இலவசமாக வழங்குதல்

**36650—திரு. எச். எம். ராஜு :*

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—